**செய்தி வெளியீடு எண்: 482** **நாள்: 24.07.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (24.7.2018) காஞ்சிபுரம் மாவட்டம், வண்டலூரிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில், புலிகளை பார்வையாளர்கள் சிறப்பான முறையில் பார்வையிட 27 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் புலிகள் இருப்பிடம் மற்றும் 27 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய சிறுவர் பூங்கா ஆகியவற்றை திறந்து வைத்தார்கள். மேலும், புதிதாக பிறந்த பெண் சிங்கக்குட்டிக்கு பெயர் சூட்டினார்கள்.

அழிவின் விளிம்பில் இருக்கும் விலங்குகளின் அடைப்பிட இனப்பெருக்கத்திற்கு அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா சிறந்த அமைப்பாக உள்ளது. மிகவும் அரிதான புலிகளை இனப்பெருக்கம் செய்வதில் இப்பூங்கா வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. தற்போது 26 புலிகளை கொண்ட இப்பூங்காவில், காட்டு இன புலிகள் மற்றும் வெள்ளைப்புலிகள் உள்ளது. இப்புலிகளை பார்வையாளர்கள் சிறப்பான முறையில் பார்வையிட 27 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 4 புலிகளை பராமரிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் புலிகள் இருப்பிடம் மற்றும் இங்கு அதிகளவு சிறுவர்கள் வருவதையொட்டி, சிறுவர்களின் பொழுதுபோக்கிற்காக 27 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய சிறுவர் பூங்கா ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் சிங்கங்கள் சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு அவை இனப்பெருக்கம் செய்து வருகின்றன. சிவா என்ற ஆண் சிங்கத்திற்கும், நீலா என்ற பெண் சிங்கத்திற்கும் 27.1.2018 அன்று பெண் சிங்க குட்டி பிறந்தது. இந்த பெண் சிங்கக்குட்டிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் ‘‘ஜெயா’’ என்று பெயர் சூட்டினார்கள்.

அப்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை:

‘‘நீலா என்ற பெண் சிங்கத்திற்கும், சிவா என்று ஆண் சிங்கத்திற்கும் பிறந்த 6 மாத பெண் சிங்கக்குட்டிக்கு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்

நல்லாசியோடு, “ஜெயா’’ என்று பெயர் சூட்டப்படுகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விலங்குகள் மீது மிகுந்த பாசம் கொண்டவர். இந்த உயிரியல் பூங்கா சிறந்து விளங்குவதற்காக பல்வேறு அடிப்படை வசதிகளை செய்து கொடுத்திருக்கிறார்கள். இந்த வண்டலூர் உயிரியல் பூங்காவில் 17 சிங்கங்கள் இருக்கின்றன, அதில் 10 பெண் சிங்கமும், 7 ஆண் சிங்கமும் இருக்கின்றன. அதுமட்டுமல்ல, கிட்டத்தட்ட இந்த வண்டலூர் உயிரியல் பூங்காவில் 193 வகையான விலங்குகள் இருக்கின்றன. மொத்தம் 2410 விலங்குகள் இருக்கின்றது. அதோடு 46 வகையான பறவைகள் இந்த உயிரியல் பூங்காவில் வளர்க்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் பார்வைக்காகவும், அவர்கள் கண்டுகளிப்பதற்காகவும் வண்டலூர் உயிரியல் பூங்காவில், விலங்குகளும், பறவைகளும் அரசால் சிறப்பான முறையிலே பேணிக்காத்து வளர்க்கப்பட்டு வருகின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, இங்கே வருகின்ற சுற்றுலா பயணிகள் கண்டுகளிப்பதற்காக விரைவிலே காண்டாமிருகம் ஒன்று பீஹார் மாநிலத்திலிருந்து பாட்னா Zoo–விலிருந்து பெறப்பட்டு நம்முடைய உயிரியில் பூங்காவிற்கு விரைவில் கொண்டு வரப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்ற மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மருத்துவர் சி.விஜயபாஸ்கர் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்களுக்கும், வருகை தந்துள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தலைமைச் செயலாளர், வனத் துறையின் செயலாளர் மற்றும் அதிகாரிகள், வருகை தந்திருக்கின்ற முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள், கழகத்தினுடைய முக்கிய நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முக்கிய முன்னாள் நிர்வாகிகள், கூட்டுறவு சங்கப் பிரதிநிதிகள் இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற அத்தனை நல்ல உள்ளங்களுக்கும், இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று புகைப்படம் எடுக்கின்ற நம்முடைய நிருபர்களுக்கும், ஊடக நண்பர்களுக்கும், பத்திரிகை நண்பர்களுக்கும் மனமாற, உளமாற பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.’’

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.பா. பென்ஜமின், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் திரு.முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத்துறை தலைவர்) திரு.ஆர்.கே. உபாத்யாய், இ.வ.ப., முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (தலைமை வனஉயிரின காப்பாளர்) திரு.டி.பி. ரகுநாத், இ.வ.ப., தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் சி. பாலசந்திரன், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா இயக்குநர் திரு.சி. யுவராஜ், இ.வ.ப., ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 24.7.2018**